1978 செப்டம்பர் 8] [திரு. செ. அரங்கநாயகம்]

அந்தத் திட்டத்தை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அடுத்து அச்சடித்து வெளியிடுகின்ற அந்த விநியோகம் சம்பந்தப்பட்ட வரையில் அது பொதுத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதனுல் பாதிக்கப்பட்ட தனியார் துறையினர் இதைச் சீர் குலைவு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்களோ என்ற சந்தேகம் எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையிலே சரி செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல யோசனைகள் ஏதாவது கூறுவார்களேயானுல் அதை ஏற்று நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிருேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் தொகுதியில் பாடபுததகங்கள் கிடைக்காமை குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, ''தஞ்சை மாவட்டம் குத்தாலம் தொகுதியில் பள்ளிக்கூடங்கள் திறந்து மூன்று மாதங்கள் ஆகியும் இதுநாள் வரையில் பாட புத்தகங்கள் சரிவர கிடைக்கவில்லை. குறிப்பாக இடைநிலை உயர் கல்விக்குத் தேவையான புத்தகங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதனுல் பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் குறைவதோடு அவர்களின் வருங்காலம் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு அதனுல் மாணவர்கள், பெற்ருேர்களிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 11.00]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் குற்ருலம் தொகுதியிலுள்ள பள்ளிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கும்பகோணத்திலுள்ள சந்திரசேகரபுரம் கூட்டுறவு நிறுவனத்துக்குத் தொடக்க நிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான எல்லாப் பாட நூல்களும் போதிய அளவில் உரிய நேரத்தில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான பாடநூல்கள் மேற்படி கூட்டுறவு நிறுவனத்தின் விற்பனைக்காக பாடநூல் நிறுவனம் இதுவரை சுமார் 10,250 எண்ணிக்கையுள்ள பாடநூல்களை அனுப்பிவைத்துள்ளது.

மீதியுள்ள சில நூல்களும் அச்சகங்களிலிருந்து கிடைக்கப் பெற்று அவைகளும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. இன்னும் இரண்டொரு தினங்களில் மேல்நிலைப் பள்ளிகளுக்கு எந்தத் தலைப்பிலும் நூல்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு இருக்காது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பள்ளிக்கூடங்கள் திறந்து மூன்று மாதங்களாகியும் இன்னும் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பதோடு உயர்நிலைக் கல்விக்குத் தேவையான ஆசிரியர்கள் ஒருவர்கூட குத்தாலத்தில் திறந்திருக்கிற உயர்நிலைப் பள்ளியில் 3—9—78 வரையில் நியமனம் செய்யவில்லை. இதுவரையில் ஆசிரியர் ஒருவர்கூட அங்கு நியமனம் செய்யப்படாத நிலையில் பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் குறைவதோடு அவர்கள் வருங்காலம் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் நான் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அங்கு ஆசிரியர்கள் எப்போது நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, பாடப் புத்தகங்களோடு மாணவர்களுக்குத் தேவையான நோட்டுகள் கிடைக்கவில்லை. அந்த நோட்டுகளில் ரூ. 1-25 என்று விலையை அதில் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் ரூ. 1.45, ரூ. 1.50 என்று அதிகமான விலைக்கு விற்கிறார்கள். ஆகவே மாணவர்களுக்குத் தேவையான நோட்டுகள், புத்தகங்கள் நியாயமான விலையில் தடங்கல் இல்லாமல் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா? ஆசிரியர்கள் எப்போது நியமனம் செய்யப் படுவார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். நோட்டுகள், பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் காலதாமதத்திற்கு மிக முக்கிய காரணம் மத்திய அரசு நமக்குத் தந்த அந்த மலிவுத்தாள் கோட்டாவை தாள் தயாரிக்கிறவர்கள் தராதது, நமக்கு வந்து சேராதது மிக முக்கிய காரணமாகும் என்பதை நான் உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(இ) குளத்துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கட்டடம் இடிந்து விழுந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் ஆர். உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆர். கிருஷ்ணன், சேலம் மு. ஆறுமுகம், கோ. இளங்கோவன், கூ. ச. முருகேசன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ''11—8—1978 அன்று, திருச்சி மாவட்டம் கரூர் பக்கத்திலுள்ள, குளத்துப் பாளையம் என்ற ஊரிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடத்தில், கட்டடம் இடிந்து விழுந்ததன் விளைவாக 3 மாணவர்கள் இறந்தது குறித்தும், ஆசிரியர் உட்பட இன்னும் பல மாணவர்கள் காயமடைந்தது குறித்தும் ''உள்ள அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.